**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.1154/2024**
**வழக்கு சாட்சி PW-10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்டாலின் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருப்பையா | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | சிவகிரி | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 19th, 2025.

**(1ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது வாசுதேவநல்லூர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 21.05.2024ம் தேதி, 18.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, மதன்பாபு என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.102/2024, சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2) இதச வின் படி வழக்கு பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை உதவி காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். இது சம்பந்தமாக உதவி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

முதல்தகவல்அறிக்கையில் எதிரிகளின் தந்தை பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் 8 வது காலத்தில் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில், 01.30 மணியளவில் நானும், எனது அப்பாவும், எனது அண்ணனும் பால்குடம் ஊர்வலத்தில் நடந்து வரும்போது, எனது மாமா மாடசாமி வீட்டு முன்பாக சம்பவம் நடந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி உதயகுமார் கையில் கம்பு வைத்திருந்ததாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மற்ற எதிரிகள் எனது அண்ணனின் முதுகிலும், முகத்திலும் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மதன்குமார், சிவபிரகாஷ், மூர்த்தி ஆகியோர் என் அண்ணனின் நெஞ்சில் மிதித்தார்கள் என்றும், என் அண்ணனின் காதில் இருந்து இரத்தம் வந்தது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு முதல்தகவல்அறிக்கையை உடனடியாக அனுப்பவில்லை என்றால் சரிதான். மறுநாள் அனுப்பி வைத்தேன். நான் சொன்ன நாளில் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யாததினால் தான் நான் மறுநாள் அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி உதயகுமார் கம்பை சம்பவயிடத்தில் போட்டு விட்டு சென்றார் என்றும் முதல்தகவல்அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் அறிவேன் சாட்சியாக யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஏசியதால் எனக்கும், மற்றவர்களுக்கும் அவமானம் ஏற்பட்டது என்றும், எதிரிகள் மிரட்டியதினால் பயம் ஏற்பட்டது என்றும், பாதுகாப்பு வேண்டும் என்றும் முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அபாயகரமான இரும்பு

போன்ற ஆயுதங்களை வைத்து தாக்கும்போது இதச பிரிவு 324 குற்றச்சாட்டு வரும் என்றால் சரிதான்.

நான் சொன்ன நாளில், நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், புகார் மனுவானது பின்யோசனை செய்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும், பொய் வழக்கு போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 17:57:41 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No.1154/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-11</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உடையார்சாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருப்பசாமி | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | தேவர்குளம் | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 19th, 2025.

**(1ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது ஆலங்குளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, தலைமைக்காவலர் ஸ்டாலின் பதிவு செய்து வைத்திருந்த நிலையக்குற்ற எண்.102/2024, சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2) இதச வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

21.05.2024ம் தேதி, 18.45 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராமகிருஷ்ணன் மற்றும் வெள்ளத்துரை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை டார்ச் லைட் மற்றும் மின்விளக்கு உதவியுடன் பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் 19.30 மணிக்கு

சம்பவயிடத்தில் கிடந்த கூர்மையான மரக்கம்பு ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.7** ஆகும். மரக்கம்பு அ.சா.பொ.1 ஆகும். பின்னர், சாட்சிகள் ராஜசேகர், மதன்பாபு, மாடசாமி, பெரியசாமி, இளங்கோ, மற்றும் தலைமைக்காவலர் ஸ்டாலின் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், 22.05.2024 ம் தேதி, காலை 06.00 மணியளவில் வழக்கின் எதிரிகள் பார்த்திபன், மாடசாமி என்ற செல்லத்துரை, முத்துப்பாண்டி என்ற செல்லத்துரை ஆகியோர்களை திரிகூடபுரம் ஊருக்கு மேற்கேயுள்ள சபரிமலையான் கோவில் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட கூர்மையான கம்பை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **அ.சா.ஆ.8** ஆகும்.

உதயகுமார், மூர்த்தி, காசிப்பாண்டியன் என்ற கார்த்திக், மதன் சவுந்தர் என்ற மதன்குமார் ஆகியோர்கள் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை.

இவ்வழக்கில் காயம்பட்ட ராஜசேகர் என்பவருக்கு சிகிச்சை அளித்த கடையநல்லூர் அரசு மருத்துவமனை மருத்துவர்.மோனிஷா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். இராஜசேகருக்கு மேல்சிகிச்சை அளித்த திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவர்.மைக்கேல்சென்ராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சிகிச்சை விபரச்சான்று பெற்றேன். மருத்துவர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் ராஜசேகருக்கு ஏற்பட்ட

காயமானது கொடுங்காயம் என்பதினால் வழக்கின் சட்டப்பிரிவினை 147, 148, 294(பி), 323, 324, 506(2) இதச –விலிருந்து சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 326, 506(2) இதச– ஆக மாற்றி சட்ட மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டமாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். சிவபிரகாஷ் என்ற பிரகாஷ் என்பவரை தலைமறைவு எதிரியாக காண்பித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 17:57:52 +0530